## 17. கண்ணாடி

**எங்களுக்கிடையே வினோதமான ஒரு போட்டி, எனக்கும் என் அம்மா வுக்கும் இடையே.**

''எனக்கு வயதாகிவிட்டது'', என்கிறாள் அவள். ''எனக்கும்தான்'', என் கிறேன் நான். அவள் அதை ஒத்துக்கொள்ளவில்லை: ''இல்லவே இல்லை!'' எனக் குக் கோபம். ஒரு பழைய கதையின் புதுப்பிக்கப்பட்ட வடிவத்தை உடனேயே எங்களுக்கு நாங்களே நிகழ்த்திக்கொள்கிறோம். ''கண்ணாடியே, இந்த சாம்ராஜ் யத்தில் எங்கள் இருவரில் யார் ரொம்ப வயதானவள்? என் அம்மாவா, நானா?''

நிச்சயமாக அவள்தான். இருந்தாலும் இந்தத் தவறுக்காக, இந்த அநீதிக்காக எனக்குள் ஒரு குரல் அலறுகிறது. என் குழந்தைப் பருவத்தின் ஆரம்ப நாட்களி லிருந்து நாங்கள் ஒன்றாக வசித்துவரும் இந்தக் கோட்டையின் நீண்ட நடை களின் கோடியிலோ, தனித்திருக்கும் படிக்கட்டின் உச்சியிலோ, இதன் கோபுரங் களில் ஒன்றிலோ எங்காவது என்னுடைய முறையீட்டைக் கேட்பதற்கென்று நீதிமன்றம் ஒன்று இருந்தாக வேண்டும்.

''குழந்தாய், உன்னுடைய குறை என்ன?''

அவ்வளவு புராதனமான, அவ்வளவு தெளிவற்ற குறை, இதை எப்படி விளக் கிச் சொல்வேன்? பிரம்மாண்டமான ஒரு கூடத்தில் நான் தனியாக இருக்கிறேன். கோடியில் உயரமான மேடை ஒன்றின் இருண்ட பகுதியில் நீதிமன்றம் இருக் கிறது. கூடத்தின் மேற்புற வளைவுகள் உயர்ந்துகொண்டே போகின்றன, நான் சிறுத்துக்கொண்டே போகிறேன், மிகச் சிறியவளாக ஆகிவிடுகிறேன், முடிவின்றி வளைந்துவளைந்து செல்லும் தரையின் கட்டங்களில் மிக நுண்ணிய ஒரு புள்ளி.

''என்னுடைய குறை, இதோ, என் முன்னாலேயே இருக்கிறாள், எப்போதும் என்னைவிட வயதானவளாக, எல்லாக் கதவுகளையும் கடந்து செல்கிறாள், எனக்கு முன்பே அவளுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது, அவளுடைய வலிகள் என்னுடைய வலிகளுக்கு முன்பே நிகழ்ந்திருக்கின்றன, எனக்குத் துன்பம் நேரும் இடத்தில் அவளுடைய கண்ணீர் ஏற்கனவே சிந்தியிருக்கிறது, என் உடலில் ஒவ் வொரு நிலையிலும் அவளுடைய உடலின் சாயல் தெரிகிறது...''

என்னுடைய விம்மல்கள் தரையில் விழுந்து உருண்டு, தரையின் விதவித மான வடிவங்களூடே பெருகி, எல்லாத் திசைகளிலிருந்தும் எதிரொலித்து, என் னுடைய முறையீடு பலமான சத்தத்துடன் மேலெழும்பிச் செல்ல, என் குரல் கேட்கப்படுகிறது.

''அது இயல்புதான், இல்லையா குழந்தாய்?''

நான் புலம்புகிறேன். மற்றவர் மத்தியில் சிறிய குழந்தையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டவளாகப் புலம்புகிறேன்.

''எனக்குக் கால் இடறும்போது அவள் என் பக்கம் திரும்பி 'நான் இருக்கு மிடத்தில் எனக்கும் கால் இடறுகிறது, அது இன்னும் கொடுமையானது' என் கிறாள்: என்னிடம் மேலும் சொல்கிறாள்: 'பெண்ணாக இருப்பது இருக்கிறதே, ஆ, நீ அதைப் பார்க்கும்போது தெரியும்.' அதை நான் பார்த்திருக்கிறேன், பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவளுடைய வலி என்னுடையதைப் போல இரண்டு

மடங்கு, ஏனென்றால் அவள் பெண்மையின் இரண்டாவது கட்டத்தில் இருக் கிறாள், நானோ முதல் கட்டத்தில்தான் இருக்கிறேன். எப்போதும் அவள் என்னை வெல்கிறாள், அவளுடைய முதுமை என் முதுமையைவிட அதிகமாக இருக்கிறது, என்னுடைய முதுமையின் மேல் ஆளுமை செலுத்துகிறது, எனக்கே யான என்னுடைய முதுமைக்கு இங்கு இடமில்லை, அவளுக்கு ஏற்படும் சீர் குலைவில் நான்தான் அவளுக்கு ஆதரவு. ஆனால் அவள்தான் என்னுடைய சீர் குலைவின் கண்ணாடி. ஆகவே நான் என்னுடைய தற்கால முதுமையையும் எதிர்கால முதுமையையும் சுமந்தாக வேண்டும். இப்படியாக, வெளித் தோற்றங் களை மீறி, அவளுடைய துயரம் இரண்டு பங்கு என்றால் என்னுடையது நான்கு பங்காக ஆகிவிடுகிறது. ஆ, எவ்வளவு பெரிய அநீதி, உரக்கக் கத்த வேண்டும் போல் இருக்கிறதே!''

நான் தரையில் உருண்டு, கால்களை உதைத்துக்கொண்டு குழந்தையைப் போலப் பெரிதாக விசும்பி அழுகிறேன்.

அங்கே உயரத்தில், என் மனதின் அடர்ந்த இருளில் இருக்கும் நீதிபதி கேட் கிறார்: ''உனக்கு என்ன வேண்டும்?''

எனக்கு வேண்டியதெல்லாம் என்னுடைய அம்மா என் பக்கம் பார்த்து நான் சொல்வதைக் கேட்க வேண்டும். அவள் முதுமை அடைவது அவளுக்குப் பாரமாக இல்லாததோடு, நான் முதுமை அடைவதையும் பச்சாதாபத்துடன் கருதி அதையும் மென்மையாக மாற்ற உதவ வேண்டும். ''நான் ஏற்கனவே வயதான வள் ஆகிவிட்டேன், அதனால் ஒன்றுமில்லை, ஆனால் நீ, ஜாக்கிரதை கண்ணா, ஆமாம் உன்னுடைய பெண் உடலில் சில மாற்றங்களைப் பார்க்கிறேன், அதற் காகக் கவலைப்படாதே, இங்கே பார், உன்னைவிட ஒரு தலைமுறை மூத்தவள், அவ்வளவு மோசமாக ஒன்றும் இல்லை...''

என்னுடைய அம்மா மாறுதலுக்குள்ளாகாதவளாக இருக்க வேண்டும், எந்த சமயத்திலும் அவளிடம் ஓடிப்போய் என்னால் இப்படிச் சொல்ல சாத்திய மாக வேண்டும்: ''எனக்கு வயது பதின்மூன்று, எனக்கு அடிவயிற்றில் வலிக்கிறது, மார்பு கனக்கிறது, விளையாட்டுத்தனமான நாயைப் போல என்னால் ஓட முடிய வில்லை, மற்றவர் பார்வைக்குப் பயப்படாமல் வெளியே போக முடியவில்லை, என்னுடைய உடல் என்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறது என்று புரிய வில்லை, ஆண்கள் எப்படிப்பட்டவர்கள் என்றோ என்னிடம் எந்த மாதிரியான அன்பு செலுத்துவார்கள் என்றோ தெரியவில்லை...'' ''எனக்கு வயது முப்பது, புன்முறுவல் செய்யாமல் இருக்கும்போதுகூட என்னுடைய கண்களின் ஓரத்தில் சுருக்கங்கள் தோன்றுகின்றன, இனியும் என்னுடைய உடல் எனக்குச் சொந்த மானதாக இல்லை, தாய்மை என் நேரத்தை விழுங்கிக்கொண்டிருக்கிறது, ஆண் கள் அந்நியர்களாக இருக்கிறார்கள்...'' ''எனக்கு வயது ஐம்பது, இதற்கு மேல் எனக்குக் குழந்தைகள் பிறக்க மாட்டார்கள், என் இடுப்பு பெருத்துவிட்டது, என் உடலுடன் முடிவின்றிப் போராடிக்கொண்டிருக்கிறேன், ஆண்கள் எனக்குத் தோழர்களாக இல்லை...'' ''எனக்கு வயது அறுபது, குழந்தைகள் என்னைத் திரும்பிப் பார்ப்பதில்லை, ஆண்களின் கண்கள் என்னைப் பார்க்காமலேயே வருடிச் செல்கின்றன, நான் மூன்றாவது பால் என்ற பகுப்பில், ஆணா பெண்ணா

*என்று தெரியாத பெயரற்ற பாலைச் சேர்ந்தவளாக இருக்கிறேன், பயமாக இருக்கிறது...'' ''எனக்கு வயது எண்பது, அம்மா இல்லாத கைக்குழந்தை நான், அசிங்கமாகவும் தாறுமாறான வடிவத்திலும் இருக்கிறேன், யாரும் என் தொட்டிலின் மேல் குனிந்து நின்று எனக்கு விளையாட்டுக் காட்டுவதில்லை, உயிரைச் சிதைத்துக்கொள்ள விரும்பும் பிசாசு நான்...''*

*இந்தக் கற்பனைக் கூடத்தில் யாரும் எனக்குப் பதிலளிக்கவில்லை. ஆனால் என் புகாரை முறையாக அளித்துவிட்டேன், கொஞ்சம் ஆறுதலாக இருக்கிறது.*

*என் அம்மா கிழவியாகாமல் முதுமையடைய வேண்டும் என்று விரும்புகிறேன். பத்திரிகைகளில் வருவதைப் போலவோ,* Epinal *படங்களில் இருப்பதைப் போலவோ, ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களின் விளம்பரங்களில் வருவதைப் போலவோ முதுமையடைய வேண்டும் என்று விரும்புகிறேன். அவளுடைய வாழ்க்கை இன்னொரு வடிவமாக, வித்தியாசமாக, ஆனால் அதே வலிமை படைத்ததாக மட்டுமே அவளுடைய முதுமை அமைய வேண்டும் என்று விரும்புகிறேன். அவளுடைய மூட்டுவாதம், நடனமாடப் பயன்படுத்தப்படும் காலணிகளை (வேண்டுமென்றால் குதிகால் பகுதியை இன்னும் தட்டையாக மாற்றிவிடலாம்) தடைசெய்யக் கூடாது, அவளுடைய இரத்தக்கொதிப்பு நல்ல சாப்பாட்டை (லேசான பத்தியம் ஏற்றுக்கொள்ளப்படும்) மறுக்கக் கூடாது, அவளுடைய தலைச்சுற்றல் வயதானவர்களுக்கான ஆடம்பரக் கப்பல் பயணத்துடன் (கப்பலில் சில வசதிகளை செய்துதரத் தயாராக இருக்கிறோம்) இசைந்து போக வேண்டும், அவளுடைய மூளை (சற்றே மந்தமாகிவிட்டது, இருந்தாலும் பொறுத்துக்கொள்வோம்) வீட்டுவரி செலுத்துவது போன்ற மிகவும் தொல்லையளிக்கும் பிரச்சினைகளை வயதுவந்தோர்களைப் போலவே தொடர்ந்து சமாளிக்க வேண்டும், அவளுடைய (அவ்வப்போது குறையும்) நினைவாற்றல் குடும்ப ஆவணங்களையும் எங்களின் கடந்த காலத்தின் அருங்காட்சியகத்தையும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.*

*பொதுவாக அவளுடைய நோய்நொடிகள், சின்னச்சின்ன உபாதைகளைப் போன்று (இளம் பெண்களின் அடிவயிற்று வலி, விளையாட்டு வீரர்களின் தசைநார் இறுக்கம்—இவற்றைப் போல) இருக்க வேண்டும். அதாவது, நம்முடைய சமத்துவ, சகிப்புத்தன்மை கொண்ட சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சாதாரண சிறு உபாதைகள்: நல்லெண்ணம் கொண்ட மருத்துவச் சோதனைக் கூடங்கள் அதற்கான மருந்துகளைக் கண்டுபிடிக்க, விழிப்புணர்வோடு இருக்கும் ஊடகங்கள் அதை நம் கவனத்துக்குக் கொண்டுவரும்.*

*அழகான படிமங்கள் நிரம்பிய இந்தக் கும்பலுக்குள் நுழைய நான் தயார். ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிவரை எல்லா வயதினரிடையேயும் எந்த ஒளிவுமறைவும் இருக்காது: தங்களுக்கான சிறந்த ஜட்டி எது என்ற பிரகடனத்தைக் கேட்க வேண்டியிருக்கும் குழந்தைகள், மாதவிடாயைச் சமாளிக்கத் தங்களுக்குக் கிடைக்கும் சிறந்த அணையாடையைப் பற்றித் தெரிவிக்கப்படும் இளம் பெண்கள், தன்னிச்சையாக சிறுநீர் வெளியேறுவதைத் தடுக்கச் சிறந்த பாதுகாப்புகள் அளிக்கப்படும் முதியவர்கள், மற்றவர்களைவிட எவ்விதத்திலும் கூடுதலாகவோ குறைவாகவோ சலுகை பெறாத, வியாபார உலகின் பலத்த*

*கொஞ்சல்களுக்கு உரிமை கோரும் இவர்கள் எல்லாருமே சமம். சக்கர நாற்காலி களும், சக்கரம் வைத்த சறுக்குப் பலகைகளும் பல்பொருள் அங்காடிகளில் ஒரே இடத்திலும், பத்திரிகை விளம்பரங்களில் ஒரே பக்கத்திலும் இருக்கும். உங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கு நீங்கள் தொல்லை கொடுக்க வேண்டாம்... முதியோர்களே, சிரியுங்கள், உங்களைத் தொலைக்காட்சியில் காட்டுகிறார்கள்!*

***என் அம்மா முதுமையடையக் கூடாது என்பது என் ஆசை. நான்*** *முதுமையடையக் கூடாது என்பது அம்மாவின் விருப்பம். எனக்கு ஆதரவாக இருப்பதற்கு அவள் திடமாக இருக்க வேண்டும். அவளுக்கு ஆதரவாக இருப் பதற்கு நான் திடமாக இருக்க வேண்டும். எங்களுடைய ஆசைகள் பிடிவாதமாகச் செம்மறியாடுகளைப் போல நேருக்குநேர் மோதிக்கொண்டு அந்த அதிர்வின் தாக்கத்தால் கிட்டத்தட்ட செயலிழந்துவிடுகின்றன.*

*அபத்தச் செயல்களின் எல்லைகளைத் தொடுமளவுக்குப் போய்விடு கிறோம்.*

*பிரச்சினை மிக எளிது: வாழ்வதற்குத் தேவையான திறமைகளை அளிக் காமல் எனக்கு வாழ்வளித்ததற்காக, ஒரே சமயத்தில் எனக்குத் தேவதையாகவும் சாத்தானாகவும் இருப்பதற்காக என் அம்மாவை நான் குறைசொல்கிறேன். மகிழ்ச்சியாக இருக்கும் ஒவ்வொரு தருணத்திலும், உடனேயே, முதல்முதலாக, அவளை நான் அழைப்பதைப் போலவே, என்னுடைய ஒவ்வொரு தோல்வி யின்போதும் அவளை நோக்கித்தான் நான் கோபமாகத் திரும்புகிறேன். என்னைக் குறையற்றவளாக, மரணமற்றவளாக அவள் படைக்கவில்லையே என்று கோபப்படுகிறேன். இப்போது முதுமை அவளைத் துரத்தும்போது என் னுடைய குறைபாடுகளையும் அநித்தியத் தன்மையையும் அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.*

*என் அப்பாவிடம் எனக்கு இது போன்ற எதிர்பார்ப்புகள் இருக்கவில்லை. அவர் இதற்கெல்லாம் வெளியில் இருந்தார்.*

***''இந்த அறையில் வெளிச்சம் போதாது'', என்கிறேன் நான்.*** *''அப்படியா'', என்று வியப்புடன் அவள் சொல்வது எனக்கு எரிச்சலூட்டுகிறது. ''இப்படியிருந்தால் என்னால் படிக்க முடியாது, எழுத்து வேலையைச் செய்ய முடியாது'', என்கிறேன். என் கண்பார்வை மோசமானது என்றும், ஒற்றைத் தலைவலி (அவளிடமிருந்து எனக்கு வந்தது) உண்டு என்றும், நிறைய வேலை இருக்கிறது என்றும், எழுதுவதற்குப் போதிய அவகாசம் கிடைப்பதில்லை என்றும் அவள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். என்னதான் ஆனாலும் எழுது வதற்கு எனக்கு உரிமை இருக்கிறதே! ''நீ மருந்தாளுநராக ஆக வேண்டும் என்று தான் நான் ஒருகாலத்தில் விரும்பினேன்,'' என்கிறாள் மீண்டுமொரு முறை, கசப்புணர்வுடன் (அல்லது பரிதாபத்துடன்). ''நீ பயிற்சி பெற்ற ஒருவரை வேலைக்கு வைத்துக்கொண்டிருந்திருப்பாய், வேண்டிய அளவு அவகாசம்*

உனக்குக் கிடைத்திருக்கும்.'' மருந்தாளுநர், உதவியாளர், அசட்டுத்தனமான சிறு பெண்களுக்குச் சொல்லப்படும் சரியான தேவதைக் கதை.

**''நீ இளமையானவள்'' என்று ஓயாமல் சொல்லிக்கொண்டிருக்கிறாள்.** அது உண்மையல்ல, நான்தான் அவளைவிட முதியவள். ஏனென்றால் நான் ஆற்ற வேண்டிய கடமை ஒன்றுடன் என் தோள்கள் மேல் சுமந்து செல்லப்பட வேண்டிய அம்மா ஒருத்தியும் இருக்கிறாள்.

கண்ணாடியில் நாங்கள் ஒருவரையொருவர் முடிவற்றுப் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறோம். அதன் ஆழங்களிலிருந்து எங்களுடைய அபயக் குரல்கள் எதிரொலிக்கின்றன.

## 18. அங்கி

**''அங்கி வாங்குதல்'' என்ற நடவடிக்கை வெற்றிகரமாக ஆரம்பித்து விட்டது. காலை ஒன்பது மணி அடிக்க ஐந்து நிமிடங்களே இருக்கின்றன.** கடை திறப்பதற்காக நடைபாதையில் காத்திருக்கிறோம்.

எங்களை வரவேற்கும் விற்பனைப் பெண் வழக்கமாக இருப்பவள் அல்ல, அவளைவிட மிக இளையவள். அது எங்களுக்கு ஒத்துப்போகுமா?

முதல் சில கணங்களிலேயே முடிவு தெரிந்துவிடும். என் அம்மாவின் முகத்தில் சலனங்களைத் தேடுகிறேன், இன்றைய வானம் எங்களுக்குச் சாதகமாக இருக்குமா அல்லது எங்களுடைய துணிகர முயற்சிக்குத் தோல்விதான் விதிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிவிக்கும் அறிகுறிகளைத் தேடுகிறேன்.

''உங்களுக்குப் போதாத காலம்,'' என்கிறாள் விற்பனைப் பெண்ணிடம், ''நான் கொஞ்சம் தொல்லை கொடுப்பவள்.'' ''இல்லை இல்லை'', என்கிறாள் விற்பனைப் பெண் துடிதுடிப்புடன். ''ஆமாம், தொல்லை கொடுப்பவள்தான்'', என்று ஆணித்தரமாக சொல்கிறாள் என் அம்மா.

அதன் அர்த்தம் எனக்குப் புரிகிறது: தொல்லை கொடுப்பவளாக நான் இருப்பதற்குக் காரணம், என்னுடைய முதுமை, என் கால்களைப் பாதித்திருக்கும் விபத்து, என் கணவரின் மறைவு, குடும்பத்தில் தொடர்ந்து நேர்ந்துவிட்டிருந்த மரணங்கள், அழிந்துகொண்டிருக்கும் மிகப் பழமையான பண்ணை, என்னுடைய தனிமை, தவிர, நம்ப முடியாத வகையில் என்மேல் திணிக்கப்பட்டு நான் இப்போது இருக்கும் இந்த முதியோர் இல்லம். அதற்கு அர்த்தம்: எனக்கு ஒத்துப்போகும்படியான உடை இங்கே இருக்க முடியாது, ஏனென்றால் என்னுடைய தற்போதைய நிலை எனக்கு ஒத்துப்போகவில்லை.

இதையெல்லாம் என் அம்மாவின் குரலில் பார்த்துணர அந்த இளம் பெண்ணால் முடிந்தால், அவள் எங்களிடமிருந்து திரும்பிச் சென்றுவிடலாம்.